# அரச நிறுவனங்களின் தற்காலிக மிகை நம்பிக்கை பொறுப்பு நிதியம்- 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

அரச நிறுவனங்களின் தற்காலிக மிகை நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) 2005 ஆகஸ்ட் 03 இல் கைச்சாத்திடப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு ஒப்பந்தத்தின் 12 ஆம் பிரிவின் (அ) பந்தியின் படி;

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை மூன்று மாதங்களிற்கொருதடவை கூட வேண்டும். எனினும், நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை மீளாய்வாண்டின்போது ஒரு கூட்டத்தை மாத்திரமே நடாத்தியிருந்தது.

(ஆ) 2006 யூன் 27 ஆந் திகதி கைச்சாத்திட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் (எம்ஓயூ) 06 ஆம் விடயத்தின் பிரகாரம் தனித்தனியாக நம்பிக்கைப் பொறுப்புக்குரிய அரச நிறுவனங்களின் திட்டமிடப்பட்ட நிதியப் பாய்ச்சல் விபரங்களை ஆகக் குறைந்தது 06 மாதங்களில் நிதிய முகாமையாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென நம்பிக்கை பொறுப்பாளரினால் வேண்டப்பட்டிருந்தன. எனினும் மீளாய்வாண்டின் போது நிதிய முகாமையாளரினால் நிதியப் பாய்ச்சல் விபரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் நிதியத்தின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 1,457.5 மில்லியன் தேறிய வருமானத்தை விளைவித்திருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நேரொத்த தேறிய வருமானமான ரூபா 2,801.9 மில்லியனுடன் ஒப்பிடுகின்ற போது நிதிசார் விளைவுகளில் ரூபா 1,344.4 மில்லியன் அல்லது 47.98 சதவீதத்திலான வீழ்ச்சியைக் காட்டியது. இவ்வீழ்ச்சிக்கு 2010 இல் திரண்ட நிதியத்திற்கு மாற்றப்பட்ட நம்பிக்கை மூலதனம் மற்றும் முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகின்ற போது பிணைமுறிகளின் உயர்ந்த உழைப்பான வட்டிவீதம் குறைவடைந்தமையும் பிரதான காரணங்களாக இருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின்போது நான்கு நலனாளிகள் மாத்திரம் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் ரூபா 3,329 மில்லியன் தொகையினை வைப்புச் செய்திருந்ததுடன் அவர்களில் ஏழு நலனாளிகள் நிதியத்திலிருந்து ரூபா 4,505.6 மில்லியன் தொகையினை மீளப்பெற்றிருந்தனர்.

(இ) 2010 ஆகஸ்ட் இல் நலனாளிகளின் முதலீடுகளில் இருந்து திரண்ட நிதியத்திற்கு மாற்றப்பட்ட 40 சதவீத தொகையான ( ரூபா 6.109 பில்லியன்) நிதியத்தின் விளைவாக 2010 சனவரி 01 இல் ரூபா 17.812 பில்லியனில் இருந்து 2011 சனவரி 01 இல் ரூபா 10.845 பில்லியன் வரை நிதியம் குறைவடைந்திருந்தது. எனினும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பத்தொன்பது அரசாங்க நிறுவனங்களினால் முதலீடு செய்யப்பட்ட ரூபா 11.786 பில்லியன் அதாவது 8.7 சதவீதம் அதிகரித்திருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது நிதியத்தின் பிரதான வருமான மூலமான முதலீட்டு மீதி ரூபா 519.4 மில்லியனால் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) எதிர்பார்க்கப்பட்ட காசோட்ட விபரங்களைச் சமர்ப்பித்தல்

(ஆ) எம்ஜஎஸ் முறைமை

(இ) நம்பிக்கைப் பொறுப்பாளர்களால் மீளப் பெறல் கோரிக்கைகளை அங்கீகரித்தல்

(ஈ) நம்பிக்கைப் பொறுப்பாளர் கூட்டங்களை ஒழுங்காக நடாத்துதல்

(உ) நலனாளிகள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களிடமுள்ள மிகை நிதிகளை மீளாய்வு செய்தல்

(ஊ) பங்கிலாபப் பங்கீடு

(எ) மாற்றீடுகளுக்கான விருப்பங்களை நலனாளிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளல்.